

புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் திருமயம் சட்டமன்றத் தொகுதியில் திருமயம் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தை முன்னாள் அமைச்சர் புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கழக செயலாளர், திருமயம் சட்டமன்ற உறுப்பினர் என்.ரகுபதி திறந்து வைத்தார். உடன் ஒன்றிய கழக செயலாளர்கள் அழகு சிதம்பரம், ஆர்.கணேசன், பொன்.ராமலிங்கம், வி.ஆர்.இளையராஜா, முன்னாள் ஒன்றிய கழக செயலாளர் எம்.பி.சரவணன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

இறையன்பன் குத்தூஸ் நிகழ்ச்சித் தொகுப்பு – வாகை சந்திரசேகர் தலைமை!

# தி.மு.க. கலை - இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை சார்பில் மறைமலை அடிகள் 150வது பிறந்தநாள் நிறைவுப் பெருவிழா!

## முனைவர் ம.இராசேந்திரன் – க.திருநாவுக்கரசு – பேராசிரியர் ஆ.இரா.வேங்கடாசலபதி – பொள்ளாச்சி உமாபதி – நே.சிற்றரசு – போஸ், வெங்கட் – எம்.ஆர்.ஆர்.வாசுவிக்ரம் சிறப்புரை!

சென்னை, ஜூலை 18-

தி.மு.க. கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை சார்பில் தனித்தமிழ் இயக்கத் தந்தை மறைமலை அடிகள் அவர்களின் 150வது பிறந்தநாள் நிறைவுப் பெருவிழா இன்று (18.7.2026, சனிக்கிழமை) மாலை 5 மணியளவில் ஹோட்டல் ஜாக், நெ.1, போரூர் சோமசுந்தரம் சாலை, தியாகராயர் நகரில் நடைபெறுகிறது.

பேரவை செயலாளர் கலைமாமணி இறையன்பன் குத்தூஸ் நிகழ்ச்சியை தொகுத்து வழங்குகிறார். பேரவைச் செயலாளர் பொள்ளாச்சி மா.உமாபதி வரவேற்புரையாற்றுகிறார்.

பேரவைத் தலைவர் வாகை சந்திரசேகர் தலைமையுரையாற்றுகிறார்.

சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, பேரவைத் துணைத் தலைவர்கள் கலைமாமணி போஸ் வெங்கட், எம்.ஆர்.ஆர். வாசு விக்ரம், ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதிச் செயலாளர் மா.பா. அன்புதுரை, ஆயிரம் விளக்கு மேற்குப் பகுதிச் செயலாளர் வினோத் வேலாயுதம் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் மா.இராசேந்திரன், திராவிட இயக்க ஆய்வாளர் க.திருநாவுக்கரசு, வரலாற்று ஆராய்ச்சியாளர் பேராசிரியர் ஆ.இரா.வேங்கடாசலபதி ஆகியோர் மறைமலை அடிகள் அவர்களின் படத்தை திறந்து வைத்து சிறப்புரையாற்றுகிறார்கள்.

பேரவை துணைச் செயலாளர் எம்.எஸ்.ஹரிபாபு, சென்னை தென்மேற்கு மாவட்ட பேரவை அமைப்பாளர் திருமலை பொன்னுரங்கம் ஆகியோர் நன்றி கூறுகிறார்கள்.

இவ்விழாவிற்கு வருகை தந்து சிறப்பிக்குமாறு பேரவைத் துணைச் செயலாளர்கள் வண்ணை அரங்கநாதன், என். தில்லை செல்வம், நன்மாறன், எழில்மாறன் செல்வேந்திரன், சி.கோபி, கலைமாமணி அ.ஜாகீர் உசேன் ஆகியோர் கேட்டுக்கொண்டுள்ளார்கள்.

புதுச்சேரியில் தொடர் போலி மருந்து தயாரிப்புகளுக்கு

# என்.ஆர்.காங்கிரஸ் - பா.ஜ.க. கூட்டணி அரசே காரணம்!

## தி.மு.க. அமைப்பாளர் இரா. சிவா பகீர் குற்றச்சாட்டு!



புதுச்சேரி, ஜூலை 18 -

புதுச்சேரி மாநிலத்தில் தொடர்ச்சியாக பொதுமக்களின் உயிருக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தி வரும் போலி மருந்து தயாரிப்புகளுக்கு ஆளும் என்.ஆர். காங்கிரஸ் - பா.ஜ.க. கூட்டணி அரசே முழு பொறுப்பேற்க வேண்டும் என்று தி.மு.க. அமைப்பாளர் இரா. சிவா குற்றம்சாட்டி உள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள செய்தி அறிக்கையில் கூறியிருப்பதாவது:

புதுச்சேரி மாநிலத்தில் முந்தைய போலி மருந்து குற்றச்சாட்டு தொடர்பாக சி.பி.ஐ. விசாரணை நடந்து வருவதும், சி.பி.ஐ. அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுத்த குற்றத்தில் அரசு அதிகாரி கைதாகி இருப்பதும் நாடே அறிந்தது. இந்த நிலையில், மீண்டும் புதுச்சேரியில் அதே வழியில் வேறு ஒரு போலி மருந்து தொழிற்சாலை இயங்குவதும், அங்கே 625 வகையான போலி மருந்துகள் தயாரிக்கப்பட்டு இலங்கை உள்ளிட்ட இந்தியாவின் பல்வேறு மாநிலங்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வந்ததும் அதிர்ச்சி அளிக்கிறது. ஒரு குற்றம் நடந்து அது விசாரணையில் உள்ள போது அதே குற்றத்தை மீண்டும் இந்த மண்ணில் நிகழ்த்துவதற்கு யார் அவர்களுக்கு தைரியம் கொடுத்தது. புதுச்சேரியில் நடந்து வரும் என்.ஆர்.காங்கிரஸ் - பா.ஜ.க. அரசின் நிர்வாகத் திறமையின்மையும், குற்றவாளிகளோடு அவர்கள் கொண்டிருக்கும் நெருக்கமுமே இதற்கு காரணம்.

முதல் போலி மருந்து வழக்கில் நடவடிக்கை தாமதப்பட்ட நிலையில் தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சிகளின் தொடர் போராட்டங்களும், அழுத்தமுமே இவ்வழக்கு சி.பி.ஐ.க்கு மாற்றப்பட்டு வேகமெடுத்தது. அதே பாணியில் தான் இன்றைய குற்றத்திற்கும், குற்றவாளிகளுக்கும் துணையாக இந்த அரசு உள்ளதோ என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. ஒட்டுமொத்த அமைச்சரவை அதிகாரத்தையும் கையில் வைத்துள்ள முதல்வர் ரங்கசாமி, இப்படிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த மக்களின் உயிரோடு விளையாடும் போலி மருந்து குற்றம் பற்றி வாய் திறக்காமல் இருப்பது வாக்களித்த மக்களுக்கு அவர் செய்யும் மிகப் பெரிய துரோகம் ஆகும். அவரது மவுனமே குற்றச்செயல்களுக்கு தூண்டுகோளாக அமைந்து விடக்கூடாது. இந்த அரசுக்கும், குற்ற வாளிகளுக்குமான தொடர்பு முழுமையாக வெளிக்கொணரப்பட வேண்டும்.

இது போன்ற குற்றங்களை கட்டுப்படுத்தும் அமைப்பாக உள்ள புதுச்சேரி மருந்து தரக்கட்டுப்பாட்டுத் துறையின் அலட்சியமும், கண்காணிப்பு யின்மைப்பற்றி முதல்வர் அக்கறை கொள்ள வேண்டும். பல ஆண்டுகளுக்கும் மேலாக இயங்கி வந்த அந்த தொழிற்சாலையில் என்ன மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன என்பதை அதிகாரிகள் ஆய்வு செய்யாமல் இருந்தது அவர்களின் நிர்வாகத் தோல்வியையும், சாத்தியமான ஊழலையும் காட்டுகிறது. மேலும் இதில் மருந்து தரக்கட்டுப்பாட்டுத் துறை அதிகாரிக்கும், ஆளும் கட்சி பிரமுகருக்கும் நேரடி தொடர்பு இருப்பதாகவும் செய்தி பரவுகிறது.

ஆகவே, இத்தகைய தொடர் குற்றங்களுக்குப் புதுச்சேரியை ஆளும் என். ஆர். காங்கிரஸ் - பாஜக கூட்டணி அரசே முழு பொறுப்பேற்க வேண்டும். இந்த இரண்டாவது போலி மருந்து விவகாரத்தையும் தற்போதைய சி.பி.ஐ. விசாரணையோடு இணைத்து விரிவான விசாரணைக்கு உத்தரவிட வேண்டும். போலி மருந்து தொழிற்சாலைகள் வளர காரணமாகவும், அலட்சியமாகவும் இருந்த சம்பந்தப்பட்ட மருந்து கட்டுப்பாட்டு அதிகாரிகளை உடனடியாக பணி நீக்கம் செய்து, அவர்கள் மீதும் குற்றவியல் வழக்கு பதிவு செய்யப்பட வேண்டும். புதுச்சேரியில் மீண்டும் போலி மருந்து தயாரிப்பை முற்றிலும் ஒழிப்பதற்கு ஏதுவாக புதுச்சேரியில் உள்ள அனைத்து மருந்து தொழிற்சாலைகளையும், அவற்றின் மூலப்பொருட்கள் கொள்முதல் விவரங்களையும் முழுமையான ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும். அதற்காக ஓய்வு பெற்ற நிதிபதி தலைமையில் சிறப்புக் குழு ஒன்றை புதுச்சேரி அரசு நியமித்து அவர்கள் சுதந்திரமாக செயல்பட நடவடிக்கை எடுக்க வேண்டும். போலி மருந்து விவகாரத்தில் தொடர்புடைய அனைவரையும் பாரபட்சமின்றி கைது செய்ய வேண்டும். தொடர்ந்து புதுச்சேரி அரசு இந்த விவகாரத்தில் அலட்சியம் காட்டுமேயானால் பொதுமக்களைத் திரட்டி மாபெரும் தொடர் போராட்டத்தை திராவிட முன்னேற்றக் கழகம் முன்னெடுக்க நேரிடும் என்பதை எச்சரிக்கையாக தெரிவித்துக் கொள்கிறேன்.

புதிய தலைமுறை தொலைக்காட்சி முதுநிலை ஆசிரியர் விஜயனுக்கு சம்மன் அனுப்பி அராஜகம்!

# ஊடக சுதந்திரத்தை நசுக்கும் த.வெ.க. அரசின் செயல்!

## சென்னை பத்திரிகையாளர் சங்கம் கண்டனம்!

சென்னை, ஜூலை 18-

சென்னை பத்திரிகையாளர் சங்கத் தலைவர் வி.செல்வின் வினோத்குமார், பொதுச் செயலாளர் பி.கோபி ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

புதிய தலைமுறை தொலைக்காட்சி முதுநிலை ஆசிரியர் விஜயனை அரசியல் வழக்கு தொடர்பாக காவல்துறையினர் சம்மன் அனுப்பி விசாரித்தனர். அவரும் நேற்று இரவில் 10 மணிக்கும், பின்னர் அழைத்தும் உரிய ஒத்துழைப்பு அளித்து ஆஜரானார்.

அதன் பிறகும் அவரது செல்போனைப் பறித்து வைத்துக்கொண்டு, இன்றும் தொடர்ச்சியாக அவரிடம் விசாரணை நடத்தி அசாதாரண சூழலை ஏற்படுத்துகின்றனர்.

வழக்கின் தன்மைக்குள் நாம் செல்லவில்லை என்றாலும், பொதுவெளியில் ஊடகப் பணியில் இருக்கும் ஒருவர், அந்த வழக்கில் தொடர்புடையதாகக் கூறப்படும் எவரிடமும் செய்தி தொடர்பாகப் பேசியிருந்தால், அதுவே குற்றம் என்பதைப்போல காவல்துறை அணுகுவது ஊடக சுதந்திரத்தை நசுக்கும் செயலாகும்.

அரசுக்கும் மக்களுக்கும் இடையில் உண்மைகளை உலகுக்குக் காட்டுவது தான், ஊடகத்தவரின் பணி என்பதை தமிழக அரசாங்கத்துக்கு சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது.

குறிப்பாக, காவல்துறை அமைச்சரான முதலமைச்சர் விஜய் இதில் உடனடியாகத் தலையிட்டு முதுநிலை ஆசிரியர் விஜயன் அவர்களை இயல்பான கடமைகளில் ஈடுபட ஆவன செய்யவேண்டும் என சென்னைப் பத்திரிகையாளர் சங்கம் வலியுறுத்துகிறது.

அண்மையில் முதலமைச்சர் பங்கேற்கும் நிகழ்ச்சிகளில் ஊடகத்தினர் தங்களின் செய்திக் கடமையைச் செய்வதற்கு இடையூறுகள் செய்யப்படுவதையும் முதலமைச்சரின் கவனத்துக்கு மீண்டும் கொண்டுவருகிறோம். ஊடக சுதந்திரத்தின் மீதான தாக்குதலை சென்னைப் பத்திரிகையாளார் சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது.

இவ்வாறு அச்சங்கத்தின் தலைவர் வி.செல்வின், வினோத்குமார், பொதுச் செயலாளர் பி.கோபி ஆகியோர் அறிக்கையில் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

# மலேசியாவிலிருந்து சென்னைக்கு கள்ள நோட்டுகள் கடத்திய பெண்!

## சி.பி.சி.ஐ.டி. போலீசார் விசாரணை!

சென்னை, ஜூலை 18 -

திருச்சி ஒருங்கிணைந்த குற்றப்பிரிவு போலீஸாருக்கு, சென்னை திருவல்லிக்கேணியில் உள்ள ஒரு தனியார் விடுதியில் கள்ள நோட்டுகள் கைமாற இருப்பதாக ரகசிய தகவல் கிடைத்தது.

இதையடுத்து, திருச்சி ஒருங்கிணைந்த குற்றப்பிரிவு போலீஸார், சென்னை ஒருங்கிணைந்த குற்றப்பிரிவு போலீஸார் இணைந்து நேற்றுமுன்தினம் சோதனை நடத்தினர்.

அப்போது, விடுதி அறையில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த ரூ.11.90 லட்சம் மதிப்பிலான கள்ளநோட்டுகள் பறிமுதல் செய்யப்பட்டன. தொடர்ந்து நடத்தப்பட்ட விசாரணையில், கள்ள நோட்டுகளை பதுக்கி வைத்திருந்ததாகக் கூறப்படும் சென்னையில் டிராவல்ஸ் நிறுவனம் நடத்தி வரும் சபீக் ரஹ்மான் (37) என்பவரது வீட்டில் போலீஸார் சோதனை நடத்தினர்.

அப்போது, ரூ.11.21 லட்சம் அசல் இந்திய ரூபாய் நோட்டுகள் மற்றும் சுமார் ரூ.34 லட்சம் மதிப்புள்ள 25 ஆயிரம் யூரோ அசல் நோட்டுகள் பறிமுதல் செய்யப்பட்டன. பின்னர், சபீக் ரஹ்மான் கைது செய்யப்பட்டார்.

அவரிடம் நடத்தப்பட்ட விசாரணையில், இந்த கள்ளநோட்டுகள் தஞ்சை மாவட்டம், வெட்டிக்காடு பகுதியைச் சேர்ந்த விவசாயி ரவிச்சந்திரன் (40) மூலம் கிடைத்தது தெரியவந்தது. இதையடுத்து, தனிப்படை போலீஸார் ரவிச்சந்திரனை கைது செய்தனர்.

அவரது வீட்டில் நடத்தப்பட்ட சோதனையில் ரூ.22.80 லட்சம் அசல் பணம், 4 பாஸ்போர்ட்டுகள் மற்றும் ரூ.9 ஆயிரம் மதிப்பிலான கள்ளநோட்டுகள் பறிமுதல் செய்யப்பட்டன.

பின்னர், அவரிடம் நடத்தப்பட்ட விசாரணையில், ரவிச்சந்திரன் கடந்த சில ஆண்டுகளாக மலேசியாவில் பணியாற்றிய போது, அங்குள்ள கால் டாக்சி ஓட்டுநர்கள் மூலம் செயல்பட்ட கள்ள நோட்டு கும்பலுடன் தொடர்பு ஏற்படுத்தி உள்ளார்.

பின்னர், கமிஷன் அடிப்படையில் கள்ளநோட்டுகளை இந்தியாவுக்கு கடத்தி விநியோகிக்கும் பணியில் ஈடுபட்டு வந்ததாகவும் கூறப்படுகிறது. சென்னைக்கு வந்தபோது டிராவல்ஸ் உரிமையாளர் சபீக் ரஹ்மானுடன் பழக்கம் ஏற்பட்டு, இருவரும் இணைந்து கள்ளநோட்டுகளை மாற்றும் பணியில் ஈடுபட்டு வந்ததாக விசாரணையில் தெரிய வந்தது.

சமீபத்தில் மலேசியாவில் செயல்படும் கும்பல், கள்ள நோட்டுகளை ஒரு பெண் மூலம் சென்னைக்கு அனுப்பி வைத்ததாகவும், அந்த பெண் சபீக் ரஹ்மானிடம் ரூ.1.10 கோடி மதிப்பிலான கள்ளநோட்டுகளை ஒப்படைத்துவிட்டு சென்றதாகவும் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

அந்த பெண் யார் என்பது குறித்து போலீஸார் விசாரித்து வருகின்றனர். இந்த வழக்கில், சர்வதேச கள்ளநோட்டு கும்பலின் தொடர்பு இருப்பதாக சந்தேகம் உள்ளதால், சிபிசிஐடி போலீஸாரும் விசாரணையை தொடங்கி உள்ளனர்.

அமெரிக்கா – ஈரான்

# அமைதி ஒப்பந்தத்தைச் சீர்குலைக்க இஸ்ரேல் முயற்சி!

## அமெரிக்க துணை அதிபர் குற்றச்சாட்டு!

வாஷிங்டன், ஜூலை 18 -

அமெரிக்கா - ஈரான் அமைதி ஒப்பந்தத்தை சீர்குலைக்க இஸ்ரேல் முயற்சி செய்து வருகிறது என அமெரிக்க துணை அதிபர் ஜேடி வான்ஸ் குற்றம் சாட்டியுள்ளார்.

அமெரிக்கா - ஈரான் இடையேயான மோதல் உச்சகட்டத்தை எட்டியுள்ள நிலையில், அமெரிக்க படைகள் ஈரானின் வடக்கு பகுதிகள் மீது வான்வழி தாக்குதலை விரிவுபடுத்தியுள்ளன. ஈரான் தலைநகரின் முக்கிய நகரங்களை குறி வைத்து தாக்குதல் நடத்தப்படுகிறது.

இந்நிலையில் தனியார் தொலைக்காட்சி நடத்த நிகழ்ச்சியில் அமெரிக்க துணை அதிபர் ஜேடி வான்ஸ் பேசியதாவது:

அமெரிக்கா - ஈரான் இடையேயான போரை முடிவுக்கு கொண்டு வர இஸ்ரேல் அரசு தடையாக உள்ளது. அமைதி ஒப்பந்தத்தை சீர்குலைக்க இஸ்ரேல் அரசில் உள்ள சிலர் முயற்சி செய்கின்றனர். அவர்கள் போரை காலவரையின்றி நீட்டிக்க விரும்புகிறார்கள். அமைதி ஒப்பந்தத்திற்கு எதிராக இஸ்ரேல் அரசு செயல்படுகிறது.

இஸ்ரேல் அரசில் இருக்கும் சிலர், ராணுவ நடவடிக்கையைத் தொடர விரும்புவதால், எங்களைத் திசைதிருப்ப முயற்சிக்கிறார்கள் என்பதில் எனக்கு எவ்வித சந்தேகமும் இல்லை. இஸ்ரேல் அரசின் சில உறுப்பினர்களுடன் தனக்கு நல்ல உறவுகள் இருந்தாலும், போரை காலவரையின்றித் தொடரச் செய்வதற்காக, இஸ்ரேல் அரசில் சிலர் சதி செய்து கொண்டு இருக்கிறார்கள் என்பது தெரியும்.

பல நாடுகள், நட்பு நாடுகள் மற்றும் எதிரி நாடுகள் அமெரிக்கக் கொள்கையில் செல்வாக்கு செலுத்த முயற்சிகின்றன. அந்த செல்வாக்கு, உண்மையில் அமெரிக்க அரசின் முக்கிய முடிவெடுப்பைப் பாதிக்கும்போதுதான் அது எனக்குக் கவலையளிக்கிறது.

இவ்வாறு ஜேடி வான்ஸ் பேசியுள்ளார்.






சுதந்திர போராட்ட வீரர் மாவீரன் பொல்லான் அவர்களின் 221 வது நினைவுநாளை முன்னிட்டு ஈரோடு தெற்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் மாவட்டக் கழக செயலாளரும், முன்னாள் அமைச்சருமான சு.முத்துசாமி பொல்லான் நினைவிடத்தில் மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார். நிகழ்வில் கழக துணை பொதுசெயலாளர் அந்தியூர் ப.செல்வராசு, ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வி.சி. சந்திரகுமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் டி.எஸ். குமாரசாமி, கழக மாணவரணி செயலாளர் வீரமணி ஜெயக்குமார், மாவட்ட துணை செயலாளர் ஆ.செந்தில்குமார், துணை மேயர் வி.செல்வராஜ், ஒன்றிய கழக செயலாளர்கள் சு. குணசேகரன், விஜயகுமார், கதிர்வேல், தோப்பு சதாசிவம், பொ.ராமசந்திரன் சுள்ளான் எஸ். ராஜேந்திரன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.





அரியலூர் மாவட்டம், தா.பழூர் மத்திய ஒன்றியம், இருகையூர் ஊராட்சி கோட்டியால் மற்றும் கூழாட்டுகுப்பம் கிராமத்திலிருந்து மாற்றுக் கட்சியினர் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை முன்னாள் அமைச்சர், அரியலூர் மாவட்டக் கழகச் செயலாளர், குன்னம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.சிவசங்கர் முன்னிலையில் தங்களை திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைத்துக் கொண்டனர். கழகத்தில் இணைந்த அனைவருக்கும் கழக இருவண்ண ஆடை அணிவித்து அனைவரையும் வரவேற்றார். இந்நிகழ்வில் தா.பழூர் மத்திய ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் இரா. அண்ணாதுரை, பொன்.செல்வம், ஏஜிஎஸ்.முருகன், ஒன்றிய துணை செயலாளர் நடராஜன், கார்த்தி மற்றும் மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், கழகத் தோழர்கள் பலரும் கலந்துகொண்டனர்.